**1990 சுவசரிய மன்றம் - 2024**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சுவசரிய மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகழ்விரிவான வருமானக்கூற்று, திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு பரிச்சயங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சுவசரிய மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சுவஸரிய மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினரை அறிவுறுத்துகின்றேன்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவசரிய மன்றச் சட்டம் | | | |
| (i) சட்டத்தின் உபபிரிவு 7(அ)(II) | சுகாதார விடயத்திற்காக சாட்டப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சபையின் அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 செப்தம்பர் முதல் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு கடிதம் ஒன்று மூலம் இந்தச் சிக்கல் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது எனவும் மற்றும் இந்தச் சிக்கல் தொடர்பாக கூடிய விரைவில் சுகாதார அமைச்சின் மூலம் ஆக்கபூர்வமான பதிலொன்று வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றதென. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ii) சட்டத்தின் உபபிரிவுகள் 18(5) மற்றும் 25(1) | மன்றத்தினால் நிதியத்திலிருந்து பணக் கொடுப்பனவு தொடர்பாக மற்றும் விதிகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், உபபிரிவு 25(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விதிகள் தயாரிக்க முடியும். அவ்வாறு மன்றத்தினால் தயாரிக்கப்படும் அனைத்து விதிகளும் அமைச்சரினால் | சட்டத்தின் பிரிவு 25(1) இன் படி தயாரிக்கப்படக்கூடிய விதிகள் தொடர்பான சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொண்டு அந்த சட்ட ஆலோசனைகளுக்கு இணங்க தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவில்ல. | | |
| (ஆ) | 2018 ஏப்ரல் 24 திகதி சுகாதார அமைச்சு மற்றும் ஜீவீகே ஈஎம்ஆர்ஐ லங்கா (தனியார்) கம்பனி (GVK EMRI Lanka (Private) Ltd) நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவசரிய மன்றச் சட்டத்தின் உபபிரிவு 26(இ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மன்றத்திற்கு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 441,074,908 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 352,591,526 தொகை அரசினால் மீளளிப்பு செய்ய வேண்டிய மீண்டுவரும் செலவாகும். அந்த மீதியில் காணப்படுகின்ற 2019 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 330,091,526 இற்கான மீதி மீளாய்வாண்டின் போதும் திறைசேரியினால் மீளளிப்பு செய்திருக்காததுடன், மீதிகளை உறுதிப்படுத்தலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்தத் தொகையினை பெற்றுக்கொள்வதற்காக கடந்த பல வருட காலமாக சுகாதார அமைச்சின் மூலம் திறைசேரிக்கு கோறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு தேவையான அனைத்து கோப்புக்கள் மற்றும் ஆவணங்கள் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும், எனினும் இதுவரை திறைசேரியினால் பதில் சமர்ப்பித்திருக்காததுடன் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் கலந்துரையாடுவதற்காக வரும்படி வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டு கலந்துரையாடலும் பின்னர் இரத்துச் செய்யப்பட்டதெனவும், திறைசேரியிலிருந்து பதில் ஏதும் கிடைத்தவுடன், அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென. | திறைசேரியுடன் கலந்துரையாடி இந்த தொகை தொடர்பாக அறுதியான தீர்மானம் ஒன்று எடுத்து அதன்படி நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் | | | |
| | (i) உபபிரிவு 38(1) இன் பந்தி (இ) | நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயன்படக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அந்த முறைமையின் பயன்தரு தன்மை தொடர்பாக | அனைத்து கணக்கு அலுவல்கள், அனைத்து செயற்பாட்டலுவல்கள் மற்றும் களஞ்சியம் தொடர்பான கருமங்கள் கணினி மயப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றதெனவும், மன்றத்தின் அனேகமாக கருமங்கள் | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன்படி, முறைமையை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி, செயற்பட்டிருக்கவில்லை. | இவ்வாறு முறையான முறைமைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுவதனால் மற்றும் அவ்வப்போது உயர் மட்ட முகாமையினால் அந்த முறைமைகளின் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான மாற்றங்கள் உள்ளக ரீதியாக கவனம் செலுத்துதல் மேற்கொள்ளப்பபடுகின்றதென. | |
| | (ii) உபபிரிவு 38(2) | சட்டத்தின் உபபிரிவு 38(1) இன் பந்தி (இ) இற்கு இணங்க மீளாய்வு எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | உள்ளக ரீதியாக பேணப்படுகின்ற முகாமைத்துவ தீர்மானங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படாதுடன், எதிர் காலத்தில் எடுக்கப்படுகின்ற அவ்வாறான எழுத்துமூல தீர்மானங்கள் காணப்படின் அது தொடர்பாக கணக்காய்விற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | அரச தொழில் முயற்சிகளின் நடத்தை தொடர்பான 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த இலக்கம் 01/2021 கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான தாபனம்சார் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் பந்தி 3.6 | மூலோபாயத் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஆக்கபூர்வமான செயலாற்றல் மதிப்பாய்வு முறைமையொன்றினை அறிமுகப்படுத்தி ஊழியர் மற்றும் முகாமைத்துவம் இடையே பிரதான செயலாற்றுகை சுட்டிகள் செயற்பட வேண்டும். ஒவ்வொரு ஊழியரினதும் ஆக்கபூர்வ தன்மை நெருங்கிய உத்தியோகத்தரினால் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தினால் உத்தியோகத்தர்களுக்கான ஆக்கபூர்வமான செயலாற்றல் மதிப்பாய்வொன்று | இணங்குகின்றேன் என. அதாவது தற்போது மேற்கொள்ளப்படுகின்ற செய்முறை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு எழுத்துமூல ஆவணங்களும் பயன்படுத்தப்பட்டு ஊழியர் செயலாற்றுகை மதிப்பாய்வு மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது என. கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தவாறு வருடாந்த சம்பள ஏற்றக் கட்டமைப்பொன்று தயாரிப்பதற்கு தேவையான தொடர் நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையின் அறிவுரையின் மீது | உத்தியோகத்தர்களுக்கான ஆக்கபூர்வமான செயலாற்றுகை மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான சம்பள ஏற்றக் கட்டமைப்பொன்று அங்கீகரித்துக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோல் சுவசரிய மன்றத்தின் பதவியணியினர் தொடர்பாக சம்பளக் கட்டமைப்பு 2019 ஆகஸ்ட் 01 திகதி முதல் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், வருடாந்த சம்பள ஏற்றக் கட்டமைப்பொன்று காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | |
| (உ) 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அரச தொழில் முயற்சிகளுக்கான தாபனம் சார் வழிகாட்டல் கோவை மற்றும் கைநூல் | | | |
| (i) 2 ஆவது அத்தியாயத்தின் பந்தி 2.3 | மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றுடன் வருடாந்த பாதீட்டுடனான மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டம் குறிப்பிட்ட வரிசை அமைச்சுச் செயலாளர் ஊடாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்டிருக்காத செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் திட்டம் வழிகாட்டலுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | வழிகாட்டல் கோவையின் 2.3 பந்திக்கு இணங்க மேற்கொள்வதற்கு தேவையாக காணப்படும் அனைத்து மாற்றங்களும் எதிர் காலத்தில் மேற்கொண்டு திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டம் மீண்டும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ii) 5 ஆவது அத்தியாயத்தின் பந்தி 3 | பாதீட்டு வருமானக் கூற்றொன்று, பாதீட்டு நிதி நிலைமையை காட்டும் | வருடாந்த பாதீடு தயாரிக்கும் போது வழிகாட்டல் கோவையின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூற்றொன்று, பாதீட்டு நிதிப் பாய்ச்சல் கூற்றொன்று மற்றும் மூலதனச் செலவு பாதீடொன்று வருடாந்த பாதீடு தயாரிக்கும் போது உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், வழிகாட்டல்களுக்கு இணங்க பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளுக்கு இணங்க பாதீட்டு நிதி நிலைமைகளை காட்டக்கூடிய கூற்றொன்று மற்றும் பாதீட்டு வருமானக் கூற்றொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என, 2025 ஆண்டு பாதீடு தயாரிக்கும் போது அந்த அனைத்து அறிக்கைகளும் சரியான முறையில் சமர்ப்பிக்கப்படும் என. | வேண்டும். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 880 | அரச பணம் பண்டங்கள் பெற்றுக்கொள்ளல் அல்லது பொறுப்பாக இருத்தல், அவ்வாறின்றேல் பண்டங்கள் வழங்குவது தொடர்பாக நிருவாகம் ரீதியாக பொறுப்பாக இருக்க வேண்டிய உத்தியோகத்தர்களும், அரச கணக்குகளுக்குரிய உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்துபவர்களும், காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் அவர்களின் கடமை அலுவல்கள் நேர்மையாக மேற்கொள்ளப்படுகின்றதென. 612 ஆவது அதிகாரமாகிய அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன் எதிர் காலத்தில் குறிப்பிட்ட பிணைப் பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 53,278,735 இற்கான தேறிய மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 269,930,094 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளின் ரூபா 216,651,359 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மன்றத்தின் செயற்பாட்டு வருமானம் அதிகரித்திருந்த போதிலும் அதற்கு ஒப்பாக கூடிய சதவீதத்தினால் செயற்பாட்டு செலவுகள் அதிகரித்திருத்தல் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தினால் வாடகை அடிப்படையில் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்தின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஐந்தாவது மாடியின் பகுதியொன்று மன்றத்தின் அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுவதுடன், செலுத்தப்படுகின்ற வாடகைத் தொகைக்காக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளும் படி 2024 மார்ச் 29 திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியை விட கூடிய பெறுமதி ஒன்று செயற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி இணங்கியிருந்ததுடன், 12 மாத உடன்படிக்கை காலமொன்றினை கவனத்தில் எடுத்த போது பெறுமதி மதிப்பீட்டினை மிகைத்து ரூபா 5 மில்லியனிற்கான வாடகைச் செலவொன்று சுவசெரிய மன்றத்தினால் மேற்கொண்டிருந்தது. மேலும், கட்டிடத்தின் உரிமையாளர் அரச பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு இணங்கியிருக்காததுடன், உடன்பட்டிருந்த வாடகைத் தொகையை மிகைத்து வேறொரு பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை உரிமையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கட்டிடத்தின் வாடகை பெறுமதி தொடர்பாக | 2025 மார்ச் 28 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அங்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மீது இந்த கட்டிட வாடகை தொடர்பாக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டதுடன், சுகாதார அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்படும் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணக் கோவையின் 835(2) இற்கு இணங்க செயற்பட வேண்டும். |

இணக்கப்பாடொன்று இன்றி மற்றும் அறிக்கை திகதி அளவில் இரு தரப்பினரிடையே அணுகியிருந்த உடன்படிக்கை ஒன்றின்றி மன்றம் தனது தலைமை அலுவலகத்தை நடாத்திச் செல்லுகின்றது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாணம் 835(2) இன் படி கட்டிடம் ஒன்று வாடகைக்கு பெறும் போது நிறுவனத் தலைவரினால் பிரதான விலை மதிப்பீட்டாளரை வினவ வேண்டியிருந்ததுடன், பிரதான விலை மதிப்பீட்டாளரின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு தாபனத் தலைவருக்கு முடியாத போது அந்தக் கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கும் நிறுவனத்திற்கு பொறுப்பான அமைச்சுச் செயலாளருக்கு தீர்மானம் ஒன்று எடுப்பதற்காக அந்த விடயத்தை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றம் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நோயாளர் காவு வண்டிகளுக்காக புதிய டயர்கள் பொறுத்தப்பட்ட பின்னர் பயன்படுத்தப்பட்ட டயர்களை அப்புறப்படுத்துவதற்காக மீண்டும் பெற்றுக்கொண்டு களஞ்சியப்படுத்தியிருந்ததுடன், சில டயர்கள் மிகவும் அதிகமாக தேய்வடைந்திருந்துடன், சில கம்பிகள் வெளியே காணப்பட்டு பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டமையால், இந்த பாதுகாப்பான சுற்றுச் சூழல் ஒன்றில் | மன்றம் முயற்சி எடுப்பது நோயாளர் காவு வண்டியொன்று இயலுமான உச்ச மட்ட சந்தர்ப்பம் வரை செயற்பாட்டலுவல்களுக்காக தொடர்பு படுத்துவதற்காகவே எனவும், அந்த அங்கீகாரத்திற்கு இணங்க உடன்படிக்கையின் படி குறிப்பிட்ட நிறுவனத்திற்கு டயர்கள் வழங்கப்படல் முறையாக மேற்கொள்ளப்படுகின்றதெனவும், அதற்குரிய ஆவணங்கள் அனைத்தும் உரிய முறையில் பேணப்பட்டு வருகின்றதெனவும். | நோயாளர் காவு வண்டிகளுக்காக டயர்கள் பொறுத்துதல் மற்றும் பயன்படுத்தப்பட்ட டயர்களை அப்புறப்படுத்துதல் மற்றும் களஞ்சியப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வைத்தியசாலைக்கு முன்னர் சிகிச்சை வழங்கும் போது பொருத்தமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. மேலும், இந்த டயர்கள் உண்மையாகவே நோயாளர் காவு வண்டிகளினால் அகற்றப்பட்டவையா என கணிக்கும் போது தவிர்க்க முடியாதுள்ளது. அதேபோல், 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது 2299 புதிய டயர்கள் நோயளர் காவு வண்டிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த டயர்கள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை ஒன்று காணப்படாத காரணத்தினால் அந்தக் காலப் பகுதியில் பயன்படுத்தப்பட்ட 1068 டயர்கள் மாத்திரம் மீண்டும் மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2022 ஆண்டின் பின்னர் இந்த டயர்கள் அப்புறப்படுத்தலின் மூலம் வருமானம் ஒன்றினை உழைப்பதற்கு மன்றத்தினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அவற்றை அழித்தொளிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றிற்கான முறையான ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 18 ஆம் இலக்க சுவசரிய மன்றச் சட்டத்தின் பிரிவு 4(இ) இற்கு இணங்க பரிசுகள் அல்லது நன்கொடைகள் பெற்றுக்கொள்வதற்காக மன்றத்திற்கு அதிகாரம் காணப்பட்ட | ரூபா 22,042,231 தொகைக்கான காசோலை திறைசேரிச் செயலாளரின் பெயரில் அன்றி 1990 சுவசரிய மன்றத்தின் பெயரில் கிடைக்கப்பட்டது எனவும், அதாவது சில | அரச கணக்குத் திணைக்களத்தின் அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், திறைசேரிச் செயலாளரின் 2022 மார்ச் 30 திகதிய FP/01/01/05/09-2022 இலக்கம் கொண்ட மன்றத்தின் தலைவரை விழித்த கடிதத்திற்கு இணங்க மன்றத்திற்கு கிடைக்கக்கூடிய பரிசுகள் / மானியங்கள் கணக்கீடு செய்ய வேண்டிய முறை தொடர்பாக அரச கணக்குத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2022 ஜூலை 08 திகதிய SA/MAA/GRG/01 இலக்கம் கொண்ட வழிகாட்டலுக்கு இணங்க மன்றத்திற்கு வழங்கப்படுகின்ற நன்கொடைகள் ஆரம்பமாக திறைசேரிப் பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ கணக்கிற்கு மாற்றுவதற்காக திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டியிருந்ததுடன், பின்னர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் மூலம் அதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் குறிப்பிட்ட கட்டுநிதி திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திடம் விண்ணப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2024 ஆண்டில் கிடைத்திருந்த நன்கொடைத் தொகை ரூபா 22,042,231 தொகை மேற்கூறிய வழிகாட்டலுக்கு இணங்க திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. | நன்கொடையாளர்களிடம் நாட்டில் நிலவிய மற்றும் அப்போதைய அரசின் நிதி பிரிவு தொடர்பாக நம்பிக்கையொன்று காணப்படாமையால் அவர்கள் திறைசேரிக்கு நேரடியாக பணம் அனுப்புவதை புறக்கணித்திருந்ததெனவும், அதன் காரணமாக அதை நேரடியாக நிதியத்திற்கு பெற்றுக்கொண்டு வங்கியில் இடப்பட்டதுடன், அவை முறைப் பிரகாரம் கணக்குப் பதிதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும். | |
| (ஆ) | சுவசரிய மன்றத்தினால் குளுக்கோஸ் மற்றும் லெக்டேட் மட்டத்தை இனங்காணும் அம்சங்களுடனான வீழ்ச்சியை கண்டறிதலுக்கான அணிவிக்கக்கூடிய புலனுணர்வு உபகரணமொன்றின் அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை நெனோ தொழில்நுட்ப தனியார் கம்பனி மற்றும் ஹொங்கொங் இல் பதிவு செய்யப்பட்டுள்ள சீஜஆர்கியு டெக்னொலொஜீஸ் (CIRQ Technologies) நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் செயற்திட்டம் வீழ்ச்சியை கண்டறியும் புலனுணர்வு உபகரண மென்பொருள் நிறுவுதல், உடலில் | இந்தச் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தேவைப்பாடு காணப்பட்ட போதிலும், அதற்காக நன்கொடையாளர்கள் நிறுவனம் ஒன்று கிடைக்காமையால் அந்த சந்தர்ப்பத்திலும் அவர்கள் கூறியது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தீர்க்கப்பட்டவுடன் குறிப்பிட்ட மானியத்தினை வழங்கப்பட முடியும் என. அதன் காரணமாக இந்த செயற்திட்டத்திற்காக குறிப்பிட்ட காலம் செலவிட நேரிடுவதுடன், அது தொடர்பான அனைத்து விடயங்களும் கடந்த காலத்தில் நடைபெற்ற பணிப்பாளர் சபை | திட்டமிடப்பட்ட காலப் பகுதியில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை வேண்டும். |

| | | |
|---|---|---|
| குளுக்கோஸ் மட்டம் மற்றும் லெக்டேட் மட்டத்தை கண்டறியும் உபகரணம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் உபகரணம் மற்றும் வீழ்ச்சியை கண்டறியும் புலனுணர்வு உபகரணம் ஆகிய இரண்டையும் உட்படுத்தி அணிவிக்கக்கூடிய உபகரணம் ஒன்றை அபிவிருத்தி செய்தல் என 03 கட்டங்களை கொண்டிருந்தது. மன்றம் ரூபா 6,601,850 தொகையை செலவு செய்து புலனுணர்வு மென்பொருளொன்றினை உருவாக்கி 02 வருடங்களை கடந்திருந்த போதிலும், ஏனைய கருமங்களை நிறைவேற்ற முடியாதிருந்தமையால் இந்த செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமையால் அது பலனற்ற செலவொன்றென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டதுடன், குறிப்பிட்ட விவரக் குறிப்புகளை பூர்த்தி செய்யும் முறையில் நன்கொடையாளர் ஒருவர் கிடைத்தவுடன் இந்த ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் அலுவல்களை பூர்த்தி செய்ய முடியும் எனவும். | |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.2 இற்கு இணங்க நிறுவனம் ஒன்றினால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், குறைந்தளவு 03 வருட காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை அலுவல்கள் பிரதான பெறுகைத் திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தினால் பெறுகைத் திட்டம் மீளாய்வாண்டிற்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் மூலதனச் சொத்துக்கள் பெறுகை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீடு முழுமையாக வழங்குதல் திறைசேரியினால் மேற்கொள்ளப்படாமையால் திட்டமிடல் நடைமுறைச் சாத்தியமாக காணப்படாததுடன், அவ்வாறான நிலைமையின் கீழ் 03 வருட காலத்திற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்க முடியாது எனவும். பெறுகைத் திட்டம் மற்றும் நேரசூசி தயாரிக்கப்பட்டது மிகவும் சிரமமான நிலைமையின் கீழ் எனவும். | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மன்றத்தினால் 2023 ஆண்டின் போது 200 கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்வதற்காக சந்தை உருவாக்கும் முறையினை பயன்படுத்தி பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதற்காக 03 நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் அழைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், | குறிப்பிட்ட விலைகூறல் திறந்த சந்தர்ப்பத்தில் விலைகூறல் சமர்ப்பித்திருந்த விலைகூறல் அழைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் மாத்திரமே எனவும், இங்கு விவரக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டது விஷேடமான நிறுவத்திற்கு தேவையான மற்றும் அதன் தேவைப்பாட்டிற்கு காணப்பட வேண்டிய பகுதிகள் | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க குறைந்த கிரயத்தில் தரமான பண்டங்களை கொள்வனவு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததெனவும், குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 03 நிறுவனங்களில் இருந்து சந்தை விலை அழைக்கப்பட்டது தொடர்பாக கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், பல்வேறு விலைகளில் பல்வேறு மாதிரியான விரிவான கையடக்க தொலைபேசி சந்தையொன்றில் பாரிய எண்ணிக்கையான வழங்குனர்கள் காணப்பட்ட போதிலும் ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருத்தல், ஒப்பீட்டு ரீதியின்றி அந்த ஒரேயொரு விலைகூறலை மாத்திரம் கவனத்தில் எடுத்து தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 10,472,500 தொகையான விலையொன்றிற்காக இந்த பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக குறைந்த கிரயத்தில் தரமான பண்டங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக மன்றம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | மற்றும் இயல்புகள் அடங்கக்கூடியவாறு ஆகும். அதன் காரணமாக இங்கு ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்த போதிலும், தேவையான தகைமையை பூர்த்தி செய்திருந்தமையால் சந்தை உருவாக்கும் விலையின் அடிப்படையில் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதெனவும், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கையின் படி தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு குறிப்பிட்ட கட்டளை வழங்கப்பட்டது எனவும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1992 தொகை எனினும் அத் திகதியில் உள்ளவாறான பதவியணி 1152 தொகையாக இருந்தமையால் பதவியணிப் பற்றாக்குறை 840 ஆக காணப்பட்டது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட 42 பதவிகளில் 10 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அந்த 10 பதவிகள் தொடர்பாக 24 பதவியணியினர் காணப்பட்டனர். அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய பொறுப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தர பகுப்பாய்வாளர்கள் பதவிகளின் எண்ணிக்கைகள் முறையே 09 மற்றும் 05 ஆக காணப்பட்டதுடன், | இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளுக்காக அவ்வப்போது விண்ணப்பங்கள் கோறப்பட்ட போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் இருந்ததெனவும், இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாமைக்கு பிரதான காரணமாவது நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் அனைத்து விண்ணப்பதாரிகளும் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத் தொகுதியை விட கூடிய தொகையொன்றை எதிர்பார்க்கின்றதெனவும், பதவி வெற்றிடங்களுக்காக தற்போது மீண்டும் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை மேற்கொள்ளப்பட்டு | அத்தியவசிய ஊழியர்கள் ஆட்சேர்ப்பதற்கும் அத்தியவசியம் அல்லாத பதவிகளை ஒழித்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அந்தப் பதவிகளில் முறையே 2018 மற்றும் 2022 ஆண்டுகள் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. அதேபோல், உதவி வழங்கல் செய்பாட்டு முகாமையாளர் பதவியொன்று 2018 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | வருகின்றதெனவும், மிகவும் கூடிய விரைவில் பதவிகளுக்கு தகைமையுடைய ஆட்கள் சேர்ப்பதற்கு முடியுமாகும் எனவும். | |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் உபபிரிவு 40(1) இற்கு இணங்க கணக்காய்வு செய்யும் நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வதற்காக அந்த நிறுவனத்தின் ஆளுகை சபையினால் உரிய முறையில் நியமனம் செய்யப்பட்ட தனது உள்ளக்காய்வாளர் ஒருவர் காணப்பட வேண்டிய போதிலும், மன்றம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவியிருக்கவில்லை. | இதற்காக பதவியணி ஒன்றினை அங்கீகரிக்கும் படி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அவ்வவ்போது அறிவித்த போதிலும் குறிப்பிட்ட அங்கீகாரம் வழங்கப்படவில்லை என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |